உ

சிவமயம்.

பலவித அலங்கார

புஷ்பப் பாட்டு.

குயப்பேட்டை

வீ. இராஜுமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

சென்னை.

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

19

வில்வாதித் தைலம்.

இந்த வில்வாதித்தைலத்தை நாலுவட்டமாவது எட்டுநாளைக் கொருமுறையாவது தலைக்குத்தேய்த்து ஸ்நானஞ்செய்துவந்தால் கைகாலெரிவு, மூத்திரயெரிவு, நீர் துவாரக் கிரிச்சனங்கள், மேகச்சூடு, பித்தச்சூடு, திரேகவனல், உட்காய்ச்சல், வாயில் நீரூரல் முதலியயாவும் தீரும். முதல்தினம் தலைமுழுகும்போது இந்தத் தைலத்தின் குணாதிசயம் தெரிந்துக்கொள்ளலாம். திரேகத்தில் அவ்வளவு குளிர்ச்சியுண்டுபண்ணி கண்கள் ஜில்லென்றிருக்கும்.

ஆழாக்குத் தைலம் அடங்கிய

1-டப்பியின் விலை ரூபா 1 8 0

பி. நா. சிதம்பரமுதலியார் பிரதர்ஸ்.

பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு, மதராஸ்.

உ

கடவுள் துணை.

பலவித அலங்கார

புஷ்பப் பாட்டு.

விநாயகர் துதி.

நேரிசை வெண்பா.

பலவித அலங்கார புஷ்பரஞ்சிதப்பாட்டை
சாலவே செந்தமிழால் சாற்றவே-கோலமயில்
கந்தனுக்குமூத்தக் கரிமுகவன்பொன்னடியை
சிந்தையினில் நெஞ்சே நினை.

சிந்து.

ஒய்யார மானபுஷ்பம்
ஒண்டொடியே செண்டுபுஷ்பம்
தையலர்கள் வாங்கும்புஷ்பம்
தருகுமணம் பாராய்புஷ்பம் ஒய்யார

குண்டுமல்லி கொடகுமல்லி
  கோதையரே வூசிமல்லி
கண்டவுடன் ஆசைப்பூட்டும்
  கன்னியரே ஜாதிமல்லி   ஒய்யார

நந்தியாவட்டை புஷ்பம்
  நருமலர் கொன்றைபுஷ்பம்
விந்தையுள்ள பாரிசாதம்
  வஞ்சியரே வாங்கும்புஷ்பம்   ஒய்யார

மன்மத பாணபுஷ்பம்
  மடுக்கலறி ரோஜாபுஷ்பம்
இன்பமுள்ள இருவாட்சி
  யேந்திழையே வாங்கும்புஷ்பம்   ஒய்யார

வெந்தாழை செந்தாழை
  வாசனைகளுள்ளபுஷ்பம்
பெண்கோதை மார்களெல்லாம்
  பூரித்து வாங்கும்புஷ்பம்   ஒய்யார

காதவழி வாடைவீசும்
  கண்மணியே மருக்கொழுந்து

மேதினிமார்கள் மெச்சும்
  மேலான அடுக்கலரி ஒய்யார

மஞ்சா சாமந்தியுடன்
  மணமுள்ள வெண்சாமந்தி
கொஞ்சு கொங்குமந்தாரை
  கோதையரே வாங்கும் புஷ்பம் ஒய்யார

அவ்வலரி செவ்வலரி
  ஆசைப்பூட்டும் நன்மருவு
செவ்விதழ மாதருக்கு
  சிறந்தநல்ல புஷ்பமிது ஒய்யார

மனம்போலும் மணந்தருகும்
  மனோரஞ்சித மானபுஷ்பம்
இனமாகவே முடிக்க
  இருக்குமணம் பாரும்புஷ்பம் ஒய்யார

மயிகொண்ணே சரக்கொண்ணே
  மகிட்சியுள்ள பன்னீர்புஷ்பம்
வையகத்தோர் தான்மகிழும்
  வாடாத மல்லிபுட்பம் ஒய்யார

சம்பங்கி புஷ்பமோடு
  சதுராகும் ரேக்குச்செண்டு

நம்பியிதை வாங்குங்கண்டு
நாணயமாய் கோர்த்தசெண்டு ' ஒப்பார

கண்டவர்க்கு ஆசைபூணும்
கடிமலராம் மொகடம்புஷ்பம்
கொண்டைக்கேற்ற கோர்வைபுஷ்பம்
கொடுக்கமணம்பாரும்புஷ்பம் ஒப்பார

மந்தாரை ஜாதிபுஷ்பம்
மனதுக்கேற்ற நல்லபுஷ்பம்
விந்தையுள்ள வர்ணபுஷ்பம்
மூலனைக்கொரு நிரமாம்புஷ்பம் ஒப்பார

சந்திரகாந்தி சூரியகாந்தி
சபைகள் நிறைந்தபுஷ்பம்
அந்தமுள்ள நிறங்கொடுக்கும்
அனேகவிதமானபுஷ்பம் ஒப்பார

அந்தியிலே விற்கும்புஷ்பம்
ஆசைகொண்டு வாங்கும்புஷ்பம்
சொந்தமான சோதிபுஷ்பம்
தொடுத்தால மணக்கும்புஷ்பம் ஒப்பார

வில்வமலர் தும்பைமலர்
விமலருக்கு பேற்றமலர்

செல்வியிதை வாங்குமலர்
உருதிபூசை கொள்ளுமலர் ஒய்யார

தாமரைப் புஷ்பமொடு
தையலரே அல்லிமலர்
கோமளமே வாங்குமலர்
குருவேர் மணத்தைப்பாரும் ஒய்யார

பம்பாயி தேசமதில்
பாங்காகப் பூத்தபுஷ்பம்
இன்பமுரு மணந்தருகும்
யேந்திழைமார் சூடும்புஷ்பம் ஒய்யார

பத்தினிமார் முடிக்கும்புஷ்பம்
பலதேச ஜாதிபுஷ்பம்
கொத்துசர மானபுஷ்பம்
கோர்க்காத விடுதிபுஷ்பம் ஒய்யார

அரசர்மகிழும் புஷ்பம்
ஆரமாகக் கட்டும்புஷ்பம்
வரிசைக் குகந்தபுஷ்பம்
வதுவைக் கலங்காரபுஷ்பம் ஒய்யார

தேவர்க் குகந்தபுஷ்பம்
தேசமெங்கும் நிறைந்தபுஷ்பம்

ஆவலாக கன்னியற்கு
  ஆசைக்கொடுக்கும்புஷ்பம் ஒய்யார

பூசைக் குகந்த புஷபம்
  பூவையர்கள் சூடும்புஷ்பம்
நேசமது செய்யும்புஷ்பம்
  நீயேவாங்கும் கண்ணேபுஷ்பம் ஒய்யார

புகழோங்கும் புஷ்பப்பாட்டு
  புவியெங்குந் தானறிய
மகிழ்செஞ்சி யேகாம்பரம்
  மறையுங்கவிபடித்தோர்வாழ்க ஒய்யார

வாழ்க வாழ்க
  வாசித்தோர் தானும்வாழ்க
நேசமுடன் கேட்டவரும்
  நீடூழிகாலம் வாழ்க. ஒய்யார

பலவித அலங்கார புஷ்பப்பாட்டு.

முற்றிற்று.